செ.வெ.எண்: 15/ஜூலை நாள் : 08.07.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## ஓய்வூதியதாரர்கள் குறைதீர்ப்பு கூட்டத்தில் ரூ.6.50 இலட்சம் மதிப்பில் பணப்பலன்களுக்கான காசோலைகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (08.07.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஓய்வூதியதாரர்கள் குறைதீர்ப்பு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 13 ஓய்வூதிதாரர்களின் பணப்பலன்களாக மொத்தம் ரூ.6.50 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசு, ஓய்வூதியதாரர்களுக்கு சேர வேண்டிய நிலுவை பணப்பலன்கள் அனைத்தும் மாவட்டம் வாரியாக முறையான பயனாளிகளுக்கு வழங்கிட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது. அதனடிப்படையில் இன்றைய தினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற ஓய்வூதியதாரர்கள் குறைதீர்ப்பு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 13 ஓய்வூதியதாரர்களுக்கு சேர வேண்டிய பணப்பலன்களாக மொத்தம் ரூ.6.50 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார். மேலும் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஓய்வூதியதாரர்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் வேண்டி மொத்தம் 12 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 10 கோரிக்கை மனுக்கள் மீது உடனடி தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் சென்னை ஓய்வூதியர் நல இயக்கக இணை இயக்குநர் திரு.கி.இராமச்சந்திரன், கணக்கு அலுவலர் திரு.கே.மதிவாணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) திரு.கோ.சேஷன், மாவட்ட கருவூல அலுவலர் திரு.அ.கபிபு உள்பட அரசு அலுவலர்கள், ஓய்வூதியதாரர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**